சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் – உதவித் திட்ட அலுவலர் – ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு தொகுப்பூதியம் பெறும் உதவித் திட்ட அலுவலர்கள் – மாதாந்திர தொகுப்பூதியத்தினை 1.11.2009 முதல் ரூ. 15,000/– ஆகவும் 1.11.2010 முதல் ரூ.17,500/– ஆகவும் உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி–3) துறை

அரசாணை (நிலை) எண். 120

நாள்: 23.10.2009.
ஐப்பசி – 6,
திருவள்ளுவர் ஆண்டு – 2040
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 30, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–2) துறை, நாள் 8.3.2007,
2. அரசாணை (நிலை) எண். 104, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–3) துறை, நாள் 17.9.2009.
3. அரசாணை (நிலை) எண். 117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–3) துறை, நாள் 8.10.2009.
4. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களின் நேர்முகக் கடித எண். 1388/அ2/2007, நாள் 13.10.2009.

********

ஆணை:-

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தில் 60 உதவித் திட்ட அலுவலர் பணியிடங்களை வெளிச் சந்தை மூலமாக ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்துகொள்ள முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் 33 உதவித் திட்ட அலுவலர் பணியிடங்களை வெளிச் சந்தை மூலமாக ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்ய இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் உதவித் திட்ட அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பணிப் பொறுப்புகளை ஒப்பீடு செய்து பார்க்கையில், அவர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பூதியம் மிகவும் குறைவாக உள்ளது என்றும், மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில்

பணியாற்றிவரும் உதவித் திட்ட மேலாளர்களின் மாதாந்திர தொகுப்பூதியத்தினை ரூ.14,000/–த்திலிருந்து ரூ.17,500/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது எனவும், அதே போன்று தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தில் பணியாற்றும் உதவித் திட்ட அலுவலர்களின் தொகுப்பூதியத்தை 1.11.2009 முதல் ரூ.12,000/–ல் இருந்து ரூ.15,000/– ஆக உயர்த்தி வழங்கலாம் எனவும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் இதே பணியில் பணியாற்றி வரும் உதவி திட்ட மேலாளர்களின் தொகுப்பூதியத்திற்கு இணையாக இவர்களின் தொகுப்பூதியத்தையும் 1.11.2010 முதல் ரூ.17,500/– ஆக உயர்த்தி வழங்கவும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு ஒன்றை அனுப்பியுள்ளார்.

3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களது கருத்துருவை அரசு கவனமாகப் பரிசீலித்து, அவரது கருத்துருவை ஏற்கலாமென முடிவு செய்து தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் உதவித் திட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர தொகுப்பூதியத்தை 1.11.2009 முதல் ரூ. 15,000/– ஆகவும் (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) 1.11.2010 முதல் ரூ.17,500/– (ரூபாய் பதினேழாயிரத்து ஐநூறு மட்டும்) ஆகவும் உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 2952/FS/P/2009, நாள் 16.10.2009– ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை – 600 032.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 600 006/600 018.

<u>நகல்</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
நிதித்துறை, சென்னை – 600 009.
முதன்மைச் செயலாளரது தனிச் செயலர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு மற்றும் உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.